# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, மாச்சு மாதம் 22 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

## *2013 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்*

*[2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ-12/2013*

## *2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக,விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2011ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு,அதன் (2) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது:-*

*"(அ) பதனிடப்பட்டு மீள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்கு;*

*(ஆ) ஏற்றுமதிக்கான பண்டங்களின் உற்பத்திக்கு மூலப் பொருளாகப் பயன்படுத்துவதற்கு; அல்லது*

*(இ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே நடாத்தப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளில் பயன்படுத்துவதற்கென, ஒரு பிணையத்தின் செயலிடத் தில் அல்லது செயலிடத்திலிருந்து சாதனங்கள், உபகர ணங்கள், பொருட்கள் மற்றும் நுகர்தகுபொருட்கள் என்பனவாகவுள்ளவற்றை, விடயத்துக்கேற்ப, களஞ் சியப்படுத்துவதற்கென, கட்டியுருவாக்குவதற்கென, திருத்துவதற்கென, பழுதுபார்ப்பதற்கென அல்லது ஏற்றுமதி செய்வதற்கென,*

2-PL 007062 -1115 (2013/03)

(இ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, ''பெற்றோலியத் தொழிற்பாடுகள்'' என்ற சொல்லமைப்பு, 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தளிக் கப்பட்ட பொருளையுடையதாதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப் படுகின்றது:-

*''2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I ஏற்புடைய தாகாமை.*

16. (1) துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டின் கொடுப்பனவு தொடர்பாக 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I இன் ஏற்பாடுகள், இலங்கைக்கு வெளியிலான மூலத்தைக் கொண்டதும், 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கைக் குள் இறக்குமதி செய்யப்பட்டதுமான ஏதேனும் பொருளுக்கு ஏற்புடையனவாதலாகாது.;

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், -

(அ) துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுக் கொடுப்பன விலிருந்து குறித்துரைக்கப்பட்ட பொருட்களுக்கு விலக்களிக்கின்றதும்; அத்துடன்

(ஆ) விதிக்கப்பட்டு அறவிடப்படுவதற்குச் சலுகைரீதியிலான வீதமொன்றைக் குறித்துரைக்கின்றதும்,

2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் I ஆம் பாகத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 2011, சனவரி 1 ஆந்தேதிக்கு

முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ஒவ்வொரு கட்டளையும், 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், தொடர்ந்து வலுவிலிருத் தலும் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*